بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/11/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அலீ பின் அபூதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔ بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

இன்று ஹஸ்ரத் அலீ பின் அபூதாலிப் (ரலி) அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். இவரது தந்தை பெயர் அப்தே மனாஃப் ஆகும்; சுட்டுப்பெயர் அபூதாலிப் ஆக இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய தாயாரின் பெயர் ஃபாத்திமா பின்த் அஸத் பின் ஹாஷிம் ஆகும். **நபித்துவத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பிறந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய தோற்றம் பற்றி வருகிறது. இவரது உயரம் நடுத்தரமானது; கண்கள் கருமையாக இருந்தன. இவரது உடல்கனத்து, தோள்கள் பரந்து இருந்தன.**

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தார்கள். சகோதரர்களுடைய பெயர்கள் தாலிப், அகீல், ஜாஃபர் ஆகும். சகோதரிகளுடைய பெயர்கள் உம்மே ஹானீ மற்றும் உம்மே ஜுமானா ஆகும். இவர்களில் தாலிப் மற்றும் ஜுமானாவைத் தவிர மற்ற அனைவரும் இஸ்லாத்தை ஏற்றனர். ஹஸ்ரத் அலீ (ரலி) உடைய சுட்டு பெயர்களாவன; அபுல் ஹஸன், அபூ ஸிப்தைன், அபூ துராப் என்பவையாகும்.

சஹீஹ் புகாரியின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டுக்கு வந்த போது, ஹஸ்ரத் அலீ (ரலி) வீட்டில் இல்லை. அன்னார் (ஸல்) அவர்கள், உமது உறவினரின் மகன் எங்கே? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள், எனக்கும் அவருக்கும் இடையில் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டு விட்டது. அன்னார் என்னிடம் கோபப்பட்டு விட்டு போய் விட்டார்கள். என்னுடன் பகலிலும் உறங்கவில்லை என்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருவரிடம், அவர் எங்கே இருக்கிறார் என்று பார்த்து வருமாறு கூறினார்கள். அவர், அல்லாஹ்வின் தூதரே! பள்ளிவாசலில் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் அலீ (ரலி) படுத்திருந்தார். அவரது விலாப்புரத்தில் போர்வை விலகி இருந்தது. சிறிது மண் அங்கு பட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மண்ணைத் துடைத்து விட்டார்கள். அபூ துராப் (மண்ணின் தந்தையே) எழுங்கள்! அபூ துராப் எழுங்கள்! என்றார்கள். இதிலிருந்து அபூ துராப் அவர்களது சுட்டுப் பெயரானது. இந்த பெயராலேயே அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பாதுகாப்பில் எவ்வாறு வந்தார்கள் என்பது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:**

“ஹஸ்ரத் அபூ தாலிப் கண்ணியமிக்க மனிதராக இருந்தார்கள். ஆனால் ஏழையாக இருந்தார்கள். மிகவும் கஷ்டத்துடன் வாழ்க்கை கழிந்து வந்தது. குறிப்பாக மக்காவில் ஒரு பஞ்சம் ஏற்பட்டபோது, அவரது நாட்கள் மிகவும் கஷ்டத்தில் கழிந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய தந்தையினுடைய சகோதரரின் கஷ்ட நிலையை பார்த்தார்கள். ஒரு நாள் தனது தந்தையுடைய மற்றொரு சகோதரரான அப்பாஸ் அவர்களிடம், எனது தந்தையின் சகோதரரே! உங்கள் சகோதரர் அபூதாலிபின் நிலைமை மிகவும் நெருக்கடியாக உள்ளது. அவரது ஒரு மகனை நீங்கள் உங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இன்னொருவரை நான் எடுத்துக் கொள்வேன் என்றார்கள். அப்பாஸ் அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். இருவரும் சேர்ந்து அபூதாலிபிடம் சென்றார்கள். இந்த விண்ணப்பத்தை எடுத்து வைத்தனர். அபூதாலிபுக்கு தமது சந்ததிகளுள் அகீலிடம் பெரும் அன்பு இருந்தது. அகீலை என்னிடம் விட்டு விடுங்கள். மற்றவர்களை விருப்பம் இருந்தால் அழைத்துச் செல்லுங்கள் என்று அவர் கூறிவிட்டார். ஆகவே ஜாஃபரை அப்பாஸ் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அலீயை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் அழைத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய வயது அப்போது சுமார் ஆறு அல்லது ஏழு ஆக இருந்தது. அதற்கு பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நிரந்தரமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்து விட்டார்கள்.”

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டில் இறை வஹீயைப் பற்றி பேச்சு வந்தபோது, அன்னாரின் வீட்டில் வசித்து வந்த ஸைது பின் ஹாரிஸ் என்ற அடிமை முன்னால் வந்து, அல்லாஹ்வின் தூதரே! நான் உங்கள் மீது ஈமான் கொள்கிறேன் என்றார். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அப்போது 11 வயது தான் ஆகி இருந்தது; அப்போது அவர் முற்றிலும் சிறுவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் கதீஜாவுக்கு இடையில் நடந்த இந்த உரையாடலை வாசலில் நின்று கேட்கின்றார்கள். இறைவனிடமிருந்து செய்தி வந்துள்ளது என்றதும், கூரிய புத்தி கொண்ட அந்த சிறுவனாகிய அலீயுடைய நன்மையின் உணர்வுகள் பொங்கி எழுந்தன. அவருக்குள் நன்மை இருந்தது; அவருடைய உணர்வுகள் மிகவும் உயர்வாக இருந்தது. ஆனால் அது நெஞ்சுக்குள் பொதிந்து இருந்தது. அந்த அலீயிடம் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளும் பண்பை வழங்கியிருந்தான். ஆனால் அப்பொழுது வரை அவருக்கு எந்த வாய்ப்பும் கிடைக்காமல் இருந்தது. தனது எண்ணங்கள் பொங்கி எழுவதற்கான நேரம் வந்ததை அவர் கண்டு கொண்டார். தனது உணர்வுகள் வளர்ந்து எழும் நேரம் வந்ததை அவர் உணர்ந்து கொண்டார். இறைவன் தன்னை அவன் பக்கம் அழைப்பதைக் கண்ட, முற்றிலும் சிறுவனாக இருந்த அந்த அலீ, வேதனையால் நிறைந்த தனது உள்ளத்துடன் வெட்கப்பட்டவாறு முன்னால் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எனது சிறியன்னையும் ஸைதும் எதன் மீது ஈமான் கொண்டார்களோ அதன் மீது நானும் ஈமான் கொள்கிறேன் என்றார்கள்.”

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒரு முறை மக்காவில் ஒரு பள்ளத்தாக்கில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் தொழுது கொண்டிருந்தபோது, திடீரென்று அங்கு அபூதாலிப் வந்தார். அபூதாலிப் அவர்களுக்கு அதுவரை இஸ்லாம் பற்றி எதுவும் தெரியாது. எனவே அவர் மிகவும் வியப்புடன் அக்காட்சியை கண்டு கொண்டிருந்தார். அன்னார் (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்ததும், சகோதரரின் மகனே! இது என்ன மார்க்கம் என்று அபூதாலிப் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

கூறினார்கள்; தந்தையினுடைய சகோதரரே! இது இறை மார்க்கமும், இப்ராஹீமின் மார்க்கமுமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூதாலிபுக்கு சுருக்கமாக இஸ்லாம் பற்றி கூறி அவருக்கு அழைப்பு விடுத்தார்கள். ஆனால், தாம் தமது மூதாதையர்களின் மார்க்கத்தை விட இயலாது என்று கூறி அதை தவிர்த்து விட்டார்கள். ஆனால் அத்துடன் **தனது மகன் அலீயைப் பார்த்து, மகனே! நிச்சயமாக நீ முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உதவியாக இரு. ஏனென்றால் நன்மையைத் தவிர வேறு எதற்கும் உன்னை அவர் அழைக்க மாட்டார் என்ற உறுதி எனக்கு உள்ளது என்றார்கள்.**

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யுமாறு கூறினார்கள். அந்த விருந்தில் அப்துல் முத்தலிபின் சந்ததிகளை அழைக்குமாறும், அதன் மூலமாக அவர்களுக்கு உண்மை தூதுச் செய்தியை எட்ட வைக்கலாம் என்றும் கூறினார்கள். ஆகவே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் விருந்துக்கான ஏற்பாடு செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நெருங்கிய உறவினர்கள் அனைவரையும் அந்த விருந்துக்கு அழைத்திருந்தார்கள். அவர்கள் ஏறக்குறைய 40 பேர் இருந்தார்கள். அவர்கள் உணவு உண்டு முடித்ததும் அன்னார் (ஸல்) பேசத் தொடங்கினார்கள். ஆனால் பேரிழந்த அபூலஹப் எவ்வாறான ஒரு வார்த்தையை கூறிவிட்டார் என்றால், அனைவரும் எழுந்து சென்று விட்டனர். ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இந்த சந்தர்ப்பம் போய் விட்டது. இப்பொழுது மீண்டும் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யும் என்று கூறினார்கள். ஆகவே அன்னாருடைய உறவினர்கள் மீண்டும் ஒன்று கூடினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களைப் பார்த்து, அப்துல் முத்தலிபின் சந்ததிகளே! நான் உங்களிடம் எவ்வாறான ஒரு விஷயத்தை எடுத்து வந்துள்ளேன் என்றால், இதை விட சிறந்த ஒன்றை எவரும் தனது கோத்திரத்திற்கு கொண்டு வந்ததில்லை. நான் உங்களை இறைவன் பக்கம் அழைக்கிறேன். நீங்கள் எனது பேச்சை ஏற்றுக் கொண்டால், மார்க்கத்திலும் உலகத்திலும் உள்ள மிகச்சிறந்த அருள்களுக்கு வாரிசாவீர்கள். இந்த பணியில் எனக்கு யார் உதவிக்கு வருவார்கள் என்று கூறுங்கள் எனக் கேட்டார்கள். அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தார்கள். சபையில் நாலாபுரமும் அமைதி நிலவியது. **திடீரென்று ஒரு திசையில் இருந்து ஒல்லியான தேகமுடைய 13 வயது சிறுவன் எழுந்து நின்றான். அவனது கண்களில் இருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. நான் எல்லோரையும் விட மிகவும் பலவீனமானவன். எல்லோரிலும் சிறியவன். ஆனால் நான் உங்களுக்கு உதவிக்கு நிற்பேன் என்று கூறினான். இது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் குரலாக இருந்தது.** இந்த சொல்லை கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறவினர்களை பார்த்து கூறினார்கள்: நீங்கள் அறிந்திருந்தால் இந்த சிறுவனின் பேச்சை கேளுங்கள். அவன் சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள்! வந்திருந்தவர்கள் இந்த காட்சியை கண்டார்கள். அதிலிருந்து படிப்பினை பெறுவதற்கு பதில் எள்ளி நகையாடினர். அபூலஹப் தமது அண்ணனிடம், பாருங்கள்! நீங்கள் உமது மகனை பின்பற்ற வேண்டும் என்று முஹம்மது உங்களுக்கு கட்டளையிடுகிறார் என்று கூறினார். பிறகு இம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் பலவீனம் கண்டு எள்ளி நகையாடி சென்றனர்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் செய்த தியாகம் பற்றிய சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

அல்லாஹ், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு மகத்தான தியாகம் செய்யும் வாய்ப்பை தந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் ஹிஜ்ரத்

செய்ய வீட்டிலிருந்து வெளியேற விரும்பியபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நீங்கள் எனது படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். நிராகரிப்பாளர்கள் உள்ளே எட்டிப் பார்த்தால், ஒருவர் உறங்குகிறார் என்று தோன்ற வேண்டும். அவர்கள் முற்றுகையிட வேறு எங்கும் போய் விடக்கூடாது என்று கூறினார்கள். **அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! வீட்டுக்கு அருகில் குறைஷியர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் கையில் வாள் ஏந்தி சுற்றி நிற்கிறார்கள்; நீங்கள் வெளியே சென்று விட்டீர்கள் என காலையில் அவர்களுக்கு தெரிய வரும்போது அவர்கள் என்னை தாக்கி கொலை செய்து விடுவார்களே! என்று ஒருபோதும் கூறவில்லை. மாறாக மிகவும் திருப்தியுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய படுக்கையில் படுத்தார்கள்.** அன்னார் (ஸல்) அவர்கள் தமது போர்வையை அவர் மீது போர்த்தி விட்டார்கள். காலையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பதிலாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதை குறைஷியர்கள் பார்த்தார்கள். அவர்கள் தமது தோல்வியில் தன்னையே கடிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பிடித்து அடிக்கவும் செய்தனர். இதனால் என்ன ஆகப்போகிறது! இறை விருப்பம் நிறைவேறி விட்டது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நிம்மதியாக மக்காவை விட்டு வெளியே போய்விட்டார்கள். **இந்த ஈமானுக்கு பதிலாக தனக்கு என்ன கிடைக்கவிருக்கிறது என்று அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு என்ன தெரியும்! ஆனால் அல்லாஹ் அறிந்திருந்தான். இந்த தியாகத்திற்கு பதிலாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மட்டும் கண்ணியம் பெறப்போவதில்லை; மாறாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சந்ததிகளும் கூட கண்ணியம் பெறப் போகின்றனர். இந்த விஷயத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது அல்லாஹ் செய்த முதல் அருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மருமகன் ஆகும் வாய்ப்பை தந்தான். இரண்டாவது அருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உள்ளத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்காக பெரும் நேசம் உருவாகியது. அன்னார் பலமுறை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை பாராட்டியுள்ளார்கள்.**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், பாகிஸ்தானைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர். தாஹிர் மஹ்மூது சாஹிப் ஷஹீது அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். அஹ்மதிய்யத்தின் எதிரிகள், 20 நவம்பர் 2020 அன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.*

*இவ்வாறே, சியர்ராலியோனைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஜமாலுத்தீன் மஹ்மூது சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சவுத்ரி மர்ஹூம் சலாஹுத்தீன் சாஹிபின் மனைவியாகிய மதிப்பிற்குரிய அமத்துஸ் ஸலாம் சாஹிபா, மற்றும் மதிப்பிற்குரிய டாக்டர். லதீஃப் குறைஷி சாஹிபின் தாயாராகிய மதிப்பிற்குரிய மன்ஸூர் புஷ்ரா சாஹிபா ஆகியோர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

*(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)*